## தமிழ்நாட்டில் பள்ளிப் படிப்பை

# இடையில் நிறுத்தும் மாணவர்கள் இல்லாத நிலை அதிகரிப்பு! மாபெரும் சாதனை!

## ஒன்றிய அரசின் கல்வி அமைச்சக ஆய்வு அறிக்கையில் தகவல்!

சென்னை, ஜன. 4 -

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் காலை உணவுத் திட்டம், திறன் மிகு வகுப்பறைகள் திட்டம் இல்லம் தேடி கல்வி திட்டம், எண்ணும் எழுத்தும் திட்டம் வாசிப்புப் பழக்கத்தை வளர்க்கும் திட்டம் மாற்றுத் திறனாளி மாணவர்கள் மீது தனிக் கவனம் செலுத்தும் திட்டம் முதலிய திட்டங்களால் தமிழ்நாட்டில் பள்ளிப் படிப்பை இடையில் விடும் மாணவர்கள் இல்லாத நிலை ஏற்பட்டு மாபெரும் சாதனை - பீகார், அசாம், இராஜஸ்தான், அரியானா ஆகிய மாநிலங்களில் பள்ளிப் படிப்பை இடையில் விடும் மாணவர்கள் எண்ணிக்கை மிகவும் அதிகரித்துள்ளது என்று ஒன்றிய அரசின் கல்வி அமைச்சக ஆய்வுஅறிக்கையில்தகவல்தெரிவித்துள்ளது.**

இந்தியா முழுவதும், 2019 ஆம் ஆண்டை விட, 2024 ஆம் ஆண்டில், பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தாமல், நடுநிலைஉயர்நிலை பள்ளிகளில் தொடர்ந்து படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையில் தமிழ்நாடு மாபெரும் சாதனை படைத்துள்ளது.

**தமிழ்நாட்டில் பள்ளிப் படிப்பில் குழந்தைகளின் சாதனைகள்!**

தமிழ்நாட்டில் பள்ளிப்படிப்பைத் தொடங்கிய 100 சிறுவர்களில் நடுநிலைப்பள்ளி முடிப்பை முடித்தவர்கள் 2019ல் 99 பேர் என்பது 2024ல் 100 பேர் எனஉயர்ந்துள்ளது. அதேபோல, சிறுமியர் எண்ணிக்கை, 97.5ல் இருந்து 100 ஆக 2024ல் அதிகரித்து இடையில் படிப்பை விடுவோர் தமிழ்நாட்டில் இல்லை என்பது புலனாகியுள்ளது.

அதேபோல, தமிழ்நாட்டில் மேல்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்த மாணவர்கள் 2019ல் 81.3 என இருந்து 2024ல் 89.2 ஆக உயர்ந்துள்ளது.மாணவிகளைப் பொறுத்த வரை 2019ல் 89.4 சதவிகிதமாக இருந்து 2024ல் 95.6 சதவிகிதமாக அதிகரித்து



சாதனை படைக்கப்பட்டுள்ளது.

**பீகார் மாநிலத்தில் பள்ளிப் படிப்பை இடையில் விட்டோர்!**

அதேநேரத்தில், பீகார் மாநிலத்தில் பள்ளிப் படிப்பைத் தொடங்கிய 100 மாணவர்களில் நடுநிலைப்பள்ளிப் படிப்பை முடித்தவர்கள் 2019ஆம் ஆண்டில் 78.6 சதவிகிதமாக இருந்தது 2024ல் 65 சதவிகிதமாக குறைந்துவிட்டது. மாணவிகளைப் பொறுத்தவரை 2019ல் 81.1 சதவிகிதமாக இருந்தது 2024ல் 65.4 சதவிகிதமாக குறைந்து பள்ளிப் படிப்பை விட்டவர்கள் எண்ணிக்கை மிக அதிகமாயிற்று.

பீகாரில் மேல்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்த மாணவர்கள் எண்ணிக்கை 51.2 சதவிகிதம் என்பது 38.8 சதவிகிதம் என 12.4 சதவிகிதம் குறைந்து இடையில் விடுபவர்கள் எண்ணிக்கை மிக மிக அதிகம் என்பதை வெளிப்படுத்துகிறது. அதேபோல மாணவிகளைப் பொறுத்தவரையிலும், மேல்நிலைப்பள்ளிப் படிப்பில் 2019ல் 51.6 சதவிகிதமாக இருந்தது 2024ல் 9.3 சதவிகிதம் குறைந்து அதாவது 42.3ஆக குறைந்து பள்ளிப் படிப்பை இடையில் விடுபவர்கள் எண்ணிக்கை மிகவும் அதிகரித்துள்ளது.


**அசாம் மாநிலத்தில் பள்ளிப் படிப்பை இடையில் விட்டோர்!**

அசாம் மாநிலத்தைப் பொறுத்தவரை, பள்ளிப் படிப்பைத் தொடங்கிய 100 மாணவர்களில் நடுநிலைப்பள்ளிப் படிப்பை முடித்தவர்கள் 2019ஆம் ஆண்டில் 93.4 சதவிகிதமாக இருந்தது 2024ல் 82.6 சதவிகிதமாகக் குறைந்துவிட்டது. மாணவிகளைப் பொறுத்த வரை 2019ல் 96.7 சதவிகிதமாக இருந்தது 2024ல் 88.7 சதவிகிதமாகக் குறைந்து பள்ளிப் படிப்பைவிட்டவர்கள் எண்ணிக்கை மிக அதிகமாயிற்று.

மேல்நிலைப்பள்ளிப் படிப்பைப் பொறுத்தவரை 2019ல் மாணவர்கள் எண்ணிக்கை 62.6 என்பது 2024ல் 57.4 சதவிகிதமாகவும்; மாணவிகள் எண்ணிக்கை 64.6 சதவிகிதம் என்பது 63.7 சதவிகிதமாகவும் குறைந்துவிட்டது.

**அரியானா மாநிலத்தில் பள்ளிப் படிப்பை இடையில் விட்டோர்!**

அரியானா மாநிலத்தை பொறுத்தவரை, பள்ளிப் படிப்பைத் தொடங்கிய 100 மாணவர்களில் நடுநிலைப்பள்ளிப் படிப்பை முடித்தவர்கள் 2019ஆம் ஆண்டில் 98.3 சதவிகிதம் என்பது2024ல் 93 சதவிகிதமாகவும்; மாணவிகளைப் பொறுத்தவரை 2019ல் 97.7 சதவிகிதம் என்பது 2024ல் 95.6 சதவிகிதமாகவும்



Falling attendance

The figures in the tables are The Hindu's calculations based on data sourced from UDISE+

Table 1: Table shows the number of students out of every 100 who completed upper primary and secondary education in 2024 ('24) and 2019 ('19). Upper primary: Class VI to VIII, Secondary: Class IX and X

• In Kerala, of the 100 boys who started schooling, 99.6 completed upper primary in 2019, which improved further to 100 in 2024

| | Upper primary | | | | Secondary | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Boys | | Girls | | Boys | | Girls | |
| State | '19 | '24 | '19 | '24 | '19 | '24 | '19 | '24 |
| Kerala | 99.6 | 100 | 100 | 100 | 88.3 | 95.7 | 93.2 | 97.5 |
| HP | 99.6 | 99.3 | 99.2 | 99.6 | 90.7 | 93.5 | 92.5 | 95.6 |
| Tamil Nadu | 99 | 100 | 97.5 | 100 | 81.3 | 89.2 | 89.4 | 95.6 |
| Punjab | 95.7 | 96.9 | 95.5 | 97.8 | 82.7 | 90 | 86.2 | 92.8 |
| Uttarakhand | 92.2 | 97.1 | 93.1 | 98.1 | 79.9 | 88.5 | 83.6 | 92.8 |
| Goa | 97.7 | 98 | 97.6 | 98.1 | 85.4 | 87.8 | 91.2 | 92.3 |
| Maharashtra | 97.1 | 99.3 | 96.3 | 99.5 | 83.4 | 88.3 | 83.5 | 90.5 |
| Telangana | 95.3 | 99.9 | 95.3 | 100 | 79.9 | 86.5 | 83.6 | 90.5 |
| Delhi | 98.7 | 99.4 | 99.2 | 99.4 | 82.6 | 87.8 | 85.5 | 90.3 |
| Andhra | 98.7 | 98.4 | 99.1 | 99.2 | 81.2 | 84.2 | 83.9 | 88.6 |
| Odisha | 92.2 | 97.8 | 91.1 | [illegible] | 80.4 | 83.7 | 83.9 | 87 |
| UP | 87.3 | 95.2 | 81.7 | 93.5 | 71.6 | 85.4 | 66.1 | 86.2 |
| Tripura | 91.4 | 94.7 | 93.9 | 96.1 | 62 | 84 | 64.2 | 86 |
| West Bengal | 92.4 | 100 | 97.1 | 100 | 73 | 78.5 | 77.5 | 85.8 |
| Haryana | 98.1 | 93 | 97.7 | 95.6 | 82.6 | 77.3 | 84 | 84.2 |
| J&K | 87.8 | 94.9 | 86.1 | 95.4 | 69.9 | 80.8 | 68.4 | 82.8 |
| Chhattisgarh | 88.9 | 91.8 | 90.2 | 94.2 | 64.7 | 71.6 | 74.6 | 81.6 |
| Nagaland | 82 | 88.8 | 86 | 90.6 | 56.3 | 76.6 | 63.5 | 79.5 |
| Manipur | 89 | 91.6 | 92.1 | 92.6 | 76.1 | 76 | 78.9 | 77.6 |
| Mizoram | 88.2 | 89.6 | 90.4 | 91.8 | 77 | 74.4 | 80.5 | 77.4 |
| MP | 91.3 | 91.8 | 90.2 | 92.8 | 65.7 | 72.2 | 66.2 | 77.3 |
| Sikkim | 92.2 | 90.8 | 94.8 | 94.3 | 65.9 | 69.8 | 73.5 | 77.1 |
| Rajasthan | 91.2 | 84.8 | 90.8 | 86.6 | 78.6 | 72.6 | 78 | 76.9 |
| Gujarat | 91.5 | 96.3 | 89 | 95 | 65.7 | 73 | 67.8 | 76.7 |
| Karnataka | 100 | 95.2 | 99.5 | 96.1 | 73.6 | 70.7 | 79.3 | 76.5 |
| Jharkhand | 83.1 | 89.5 | 85.7 | 90.8 | 61 | 74.3 | 63.3 | 75.7 |
| Arunachal | 79.2 | 87.1 | 79.9 | 88.4 | 42.3 | 66.7 | 44.9 | 70.2 |
| Assam | 93.4 | 82.6 | 96.7 | 88.7 | 62.6 | 57.4 | 64.6 | 63.7 |
| Meghalaya | 70.7 | 77.8 | 76.5 | 82.1 | 48.8 | 54.6 | 58.2 | 61 |
| Bihar | 78.6 | 65 | 81.1 | 65.4 | 51.2 | 38.8 | 51.6 | 40.3 |
| INDIA | 91.1 | 92.7 | 90.6 | 93 | 72.4 | 77.2 | 73.5 | 80.4 |

• In Bihar, of the 100 girls who started schooling, only 40.3 completed secondary education in 2024 compared to 51.6 of them in 2019

Table 2: The table ranks the States across each column based on the figures given in table 1. For instance, Karnataka was ranked number 1 in the first column as all the 100 boys who started schooling completed upper primary education in 2019

| | Upper primary | | | | Secondary | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Boys | | Girls | | Boys | | Girls | |
| State | '19 | '24 | '19 | '24 | '19 | '24 | '19 | '24 |
| Kerala | 2 | 1 | 1 | 1 | 2 | 1 | 1 | 1 |
| HP | 3 | 6 | 3 | 5 | 1 | 2 | 2 | 2 |
| Tamil Nadu | 4 | 1 | 7 | 1 | 8 | 4 | 4 | 2 |
| Punjab | 10 | 12 | 12 | 12 | 5 | 3 | 3 | 4 |
| Uttarakhand | 14 | 11 | 16 | 10 | 11 | 5 | 11 | 4 |
| Goa | 8 | 9 | 8 | 10 | 3 | 8 | 3 | 6 |
| Maharashtra | 9 | 6 | 11 | 6 | 4 | 6 | 12 | 7 |
| Telangana | 11 | 4 | 13 | 1 | 11 | 9 | 10 | 7 |
| Delhi | 5 | 5 | 3 | 7 | 6 | 7 | 6 | 9 |
| Andhra | 5 | 8 | 5 | 8 | 9 | 11 | 9 | 10 |
| Odisha | 16 | [illegible] | 18 | 9 | 10 | 13 | 8 | 11 |
| UP | 25 | 18 | 27 | 20 | 18 | 10 | 23 | 12 |
| Tripura | 18 | 17 | 15 | 13 | 25 | 12 | 25 | 13 |
| West Bengal | 13 | 1 | 9 | 1 | 17 | 15 | 17 | 14 |
| Haryana | 7 | 18 | 6 | 15 | 6 | 16 | 7 | 15 |
| J&K | 24 | 16 | 24 | 16 | 19 | 14 | 20 | 16 |
| Chhattisgarh | 22 | 19 | 21 | 19 | 23 | 24 | 18 | 17 |
| Nagaland | 27 | 25 | 25 | 25 | 27 | 17 | 26 | 18 |
| Manipur | 21 | 21 | 17 | 22 | 15 | 18 | 15 | 19 |
| Mizoram | 23 | 23 | 20 | 23 | 14 | 19 | 13 | 20 |
| MP | 19 | 19 | 21 | 21 | 22 | 23 | 22 | 21 |
| Sikkim | 14 | 22 | 14 | 18 | 20 | 26 | 19 | 22 |
| Rajasthan | 20 | 27 | 19 | 28 | 13 | 22 | 16 | 23 |
| Gujarat | 17 | 13 | 23 | 17 | 21 | 21 | 21 | 24 |
| Karnataka | 1 | 15 | 2 | 14 | 16 | 25 | 14 | 25 |
| Jharkhand | 26 | 24 | 26 | 24 | 26 | 20 | 27 | 26 |
| Arunachal | 28 | 26 | 29 | 27 | 30 | 27 | 30 | 27 |
| Assam | 12 | 28 | 10 | 26 | 24 | 28 | 24 | 28 |
| Meghalaya | 30 | 29 | 30 | 29 | 29 | 29 | 28 | 29 |
| Bihar | 29 | 30 | 28 | 30 | 28 | 30 | 29 | 30 |

• In the first column, Meghalaya is ranked last as 30th as of the 100 boys who started schooling, only 78.6 completed upper primary in 2019, the least among all States

குறைந்து பள்ளிப் படிப்பைவிட்டவர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மேல்நிலைப்பள்ளி படிப்பை பொறுத்தவரை 2019ல் மாணவர்கள் எண்ணிக்கை 82.6 என்பது 2024ல் 77.3 சதவிகிதமாக குறைந்துவிட்டது.

**ராஜஸ்தான் மாநிலத்தில் பள்ளிப் படிப்பை இடையில் விட்டோர்!**

ராஜஸ்தான் மாநிலத்தில், பள்ளிப் படிப்பைத் தொடங்கிய 100 மாணவர் களில் நடுநிலைப்பள்ளி படிப்பை முடித்தவர்கள் 2019ஆம் ஆண்டில் 91.2 சதவிகிதம் என்பது2024ல் 84.8 சதவிகிதமாகவும்; மாணவிகளைப் பொறுத்தவரை 2019ல் 90.8 சதவிகிதம் என்பது 2024ல் 86.6 சதவிகிதமாகவும் குறைந்து பள்ளிப் படிப்பைவிட்டவர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அதேபோல, மேல்நிலைப்பள்ளி படிப்பை பொறுத்தவரை 2019ல் மாணவர்கள் எண்ணிக்கை 78.6 என்பது 2024ல் 72.6 சதவிகிதமாகவும்; மாணவிகள் எண்ணிக்கை 78 சதவிகிதம் என்பது 76.9 சதவிகிதமாகவும் குறைந்துவிட்டது.

பீகார், அசாம், அரியானா, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் பள்ளிப் படிப்பை இடையில் விடுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டில் பள்ளிப் படிப்பில் சேரும் குழந்தைகள் அனைவரும் தொடர்ந்து படிக்க வேண்டும் என்பதற்காகச் செயல்படுத்தி வரும் காலை உணவுத் திட்டம், திறன் மிகு வகுப்பறைகள் திட்டம், இல்லம் தேடி கல்வி திட்டம், எண்ணும் எழுத்தும் திட்டம், வாசிப்புப் பழக்கத்தை வளர்க்கும் திட்டம் மாற்றுத் திறனாளி மாணவர்கள் மீது தனி கவனம் செலுத்தும்திட்டம், முதலிய திட்டங்களால்தான் குழந்தைகள் பள்ளிக் கல்வியில் இடைநிற்றல் இல்லாமல் தொடர்ந்து ஆர்வத்துடன் பயப்பதில்ஊக்கமும் உற்சாகமும் அடைகிறார்கள் என்பது ஒன்றிய அரசின் கல்வி அமைச்சக (UDISE+) ஆய்வின்மூலம் தெரியவந்துள்ளது.



சென்னை தலைமைச் செயலகத்தில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (02.01.2025) “சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா நடத்துவது குறித்து தொடர்புடைய துறை அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி சந்தரமோகன், முதலமைச்சர் அவர்களின் செயலாளர் எம். எஸ்.சண்முகம், சுற்றுலாத் துறை ஆணையர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், அரசு அருங்காட்சியகங்கள் துறை இயக்குநர் திருமதி கவிதா ராமு, முதலமைச்சர் அவர்களின் இணைச் செயலாளர் கோ.லட்சுமிபதி, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் சே.ரா.காந்தி, இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் சீ.சௌமியா, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தேசிய அளவில் வாள் வீச்சுப் போட்டியில் 12வது முறை தங்கம் வென்ற

# தமிழ்நாட்டு வீராங்கனை பவானி தேவிக்கு வாழ்த்து!



## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜன.4-

தேசிய அளவிலான வாள் வீச்சுப் போட்டியில் 12-ஆவது முறையாக தங்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த வீராங்கனை சி.ஏ.பவானிதேவியைப் பாராட்டி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:



**12-ஆவது முறையாக தேசிய அளவிலான வாள் வீச்சுப் போட்டியில் தங்கம் வென்று தன்னிகரில்லா சாதனையைப் படைத்துள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த தங்கை சி.ஏ. பவானிதேவி அவர்களை வாழ்த்தி மகிழ்கிறோம்.**


**ஒலிம்பிக் வீராங்கனையான தங்கை பவானி தேவி, நம்முடைய தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் எலைட் திட்ட விளையாட்டு வீராங்கனை என்பது கூடுதல் சிறப்பு.**

**திசையெங்கும் வாள்வீசி வாகை சூடி வரும் தங்கை பவானி தேவியின் வெற்றிப்பயணம் தொடர என்றும் துணை நிற்போம்.**

**அவருக்கு அன்பையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறோம்.**

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# கலைஞர் மகன் தந்த புதுமை கண்ணாடிப் பாலம்!



விண்ணில் ஒரு வானவில்லாய்க்
கண்ணாடிப் பாலம்!

விவேகத்திலிருந்து பேரறிவுக்கு
வியப்புடன் அமைத்தேகும்
கண்ணாடிப் பாலம்

உள்நாடிப் பார்க்கவைக்கும்
உளவியலின் மேதையினைக்
கண்ணாரக் காண்பதற்குக்
கண்ணாடிப் பாலம்

காலத்துக்குப் பாலமிட்ட
ஞானவிளக்கு ஆனவனைக்
கை தொட்டு வணங்குதற்குக்
கண்ணாடிப் பாலம்

குமரியெனும் தமிழ்த்தாயின்
மூத்த மகன் இவனென்று
கொண்டாடும் பெரியவனைக்
கண்டு மலரிட அழைக்கும்
கண்ணாடிப் பாலம்

வையம் வணங்கும் எங்கள்
அய்யன் திருவடிக்கு
அன்போடு வழிகாட்டும்
கண்ணாடிப் பாலம்



முழங்கும் கடல்நடுவே
விளங்குகின்ற வள்ளுவனே !
அங்கிருந்தபடியே நீ
அனைத்துலக மக்களுக்கும்
அறம் சொல்க
நாயகனே.

**கவிஞர்**
**சிற்பி பாலசுப்பிரமணியம்**



## அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும்

# பொங்கல் பரிசுத் தொகுப்பினை தடையின்றி வழங்க வேண்டும்!

## ஆய்வுக் கூட்டத்தில் - அமைச்சர் அர.சக்கரபாணி வலியுறுத்தல்!

சென்னை, ஜன. 4 - தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாடும் பொருட்டு மக்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரால் அறிவிக்கப்பட்டுள்ள பொங்கல் பரிசுத் தொகுப்பினை பொதுவிநியோக அங்காடிகளின்மூலம் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு தடையின்றி வழங்குவது குறித்தும் மற்றும் பொது விநியோக அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம் குறித்தும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆய்வுக்கூட்டம் நடத்தினார்.

உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி நேற்று முன்தினம் (02.01.2025) தலைமைச் செயலகத்தில் துறை சார்ந்த உயர் அலுவலர்களுடன் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சரால் அறிவிக்கப்பட்டுள்ள பொங்கல் பரிசுத் தொகுப்பில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினால் நகர்வு செய்யப்படும் பச்சரிசி மற்றும் சர்க்கரையின் தரத்தினை உறுதி செய்திடுமாறும், கரும்பின் நுனியிலிருக்கும் தோகையினை வெட்டாமல் முழுக்கரும்பையும் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கிட கூட்டுறவுத் துறையினருடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்.

மேலும், பொதுவிநியோக அங்காடிகளில் அத்தியாவசியப் பொருட்களின் இருப்பு மற்றும் விநியோகத்தின் நிலையினை மாநிலம் முழுவதும் கண்காணித்து, உடனுக்குடன் குறித்த காலத்தில் குடும்ப



அட்டைதாரர்களுக்கு அனைத்துப் பொருட்களும் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்திடவும் அறிவுறுத்தினார்கள்.

புதிய குடும்ப அட்டைகளுக்கு விண்ணப்பித்துள்ளவிண்ணப்பங்களை உடனுக் குடன் பரிசீலித்து தகுதியுள்ள விண்ணப்பதாரர் களின் குடும்பங்களுக்கு, புதிய குடும்ப அட்டைகள் விரைந்து வழங்கிடவும், குடும்ப அட்டைகளின் எண்ணிக்கைக்கேற்ப தேவைப்படும் இடங்களில் புதியதாக நியாய விலைக்கடைகளை திறந்திடவும் அறிவுறுத்தினார்.

புதிய சேமிப்புக்கிடங்குகள் கட்டுவதற்கு தகுதியான நிலங்களைத் தேர்வு செய்திடுமாறு தமிழ்நாடு சேமிப்புக்கிடங்கு நிர்வாக இயக்குநர் அவர்களை கேட்டுக் கொண்டார்.

குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வுத்துறை அலுவலர்கள் பொது விநியோகத் திட்டப் பொருட்கள் கடத்தல் மற்றும் பதுக்கலைத் தடுப்பதற்கு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை பாராட்டியும், எல்லையோர அண்டை மாநிலங்களின் அலுவலர்களுடன் இணைந்து கலந்தாய்வுக் கூட்டங்கள் மேற்கொண்டு அரிசிக் கடத்தலை முற்றிலுமாக ஒழித்திடுமாறும் அறிவுறுத்தினார்கள்.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். ஜெ. ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலர்கள் கூட்டுறவுத்துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியபடி பொங்கல் பரிசுத் தொகுப்பினை குடும்ப அட்டைதாரர்களுக்கு உரிய காலத்தில் தரத்துடன் வழங்கப்படுவதை உறுதி செய்திடுமாறு கேட்டுக்கொண்டார்.

மேலும், இந்த ஆய்வுக்கூட்டத்தில் தமிழ்நாடு சேமிப்புக்கிடங்கு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சு.பழனிசாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் ஆ.அண்ணாதுரை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அரசு கூடுதல் செயலாளர், அமர்குஷ் வாஹா, உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் இயக்குநர் த.மோகன், கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) திருமதி. காயத்ரி கிருஷ்ணன், மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.